# தமிழ் இலக்கியங்களில் அறக்கோட்பாடு

# Tamil Ilakiyangalil Arakkotpadu

**பிரஷிலா.சு**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் -641006

**Prashila.S**, Assistant Professor, Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science – 641006

ORCID ID: https://orcid.org/0009-0008-1238-8619

**DOI: 10.5281/zenodo.12788916**


## Abstract

Our forefathers were the ones who were determined to live a virtuous life in everything be it virtue, material, pleasure, home. They have lived to live virtuously because one's good qualities mark one's superiority over others. Dictionaries interpret many things like chastity, duty, virtue, charity, and dignity for the word virtue. But before the appearance of the word aram in Tamil, words like proverb, mudurai, thank you, goodness, morality, morals, duty etc. were in use. Virtue is the moral system that man defines for himself. There is no greater wealth in this world than doing good deeds. Virtue can increase a person's life span. Stands for a good way to go. The mind is the source of the greatest creative power and intellectual power. Therefore, it is impossible to analyze the characteristics of various people and say whether the activity is virtuous, whether the activity is non-virtuous or neutral. Therefore, the common characteristics and elements of a particular land should be explored with the help of literature written on behalf of various population groups. In this way, the moral principles expressed in the literature will form the basis for all kinds of good deeds as the unanimous voice of the society. Similarly, different virtues can be found in literature according to time. As an example of this, Tamil literature expresses virtue in books such as Tirukkural, Naladiayar, Nanmanikadikai, and Sangha literature. Thus, this review article is intended to highlight moral messages.

## ஆய்வுச்சுருக்கம்

நம் முன்னோர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என அனைத்திலும் நற்பண்புகளை கடைபிடித்து வாழ வேண்டும் என்று உறுதியாய் வாழ்ந்தவர்கள். ஒருவருடைய நல்ல பண்புகளை மற்றவர் இடத்தில் மேன்மை உள்ளவராக அடையாளப்படுத்தும் என்பதால் அறத்தினைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்று வாழ்ந்துள்ளனர். அறம் என்ற சொல்லுக்கு கற்பு, கடமை, புண்ணியம், தர்மம், கண்ணியம் என பல பொருட்களை அகராதிகள் எடுத்து உரைக்கின்றன. ஆனால் தமிழில் அறம் என்ற சொல் தோன்றுவதற்கு முன்பு பழமொழி, மூதுரை, நன்றி, நன்மை, நன்னெறி, ஒழுக்கம், கடமை போன்று சொற்கள் வழக்கத்தில் இருந்துள்ளன. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளை அறம் என்று கூறலாம். இவ்வுலகில் ஒருவனுக்கு அறம் செய்வதை காட்டிலும் மிகுந்த செல்வம் வேறில்லை. அறம் மனிதனுடைய ஆயுள் காலத்தை கூட்டக்கூடியதாக இருக்கிறது. நல்ல வழியில் செல்வதற்கு துணை நிற்கிறது. மனமே மிகப்பெரிய ஆக்க சக்திக்கும் அறிவு சக்திக்கும் காரணமாகும். எனவே பலதரப்பட்ட மக்களின் குணநலன்களை எல்லாம் ஒப்பு நோக்கி இன்னார் செயல்பாடு

அறம் சார்ந்தது, இன்னார் செயல்பாடு அறம் சாராதது, இன்னார் நடுநிலைமையானவர் என்று ஆய்ந்து சொல்லுதல் இயலாதது. எனவே பல்வேறு மக்களின் சார்பாய் படைக்கப்பட்ட இலக்கியங்களின் துணையுடன் குறிப்பிட்ட நிலத்திற்குரிய பொதுவான பண்புகளையும் கூறுகளையும் ஆராய்தல் வேண்டும். அவ்வகையில் இலக்கியங்கள் கூறும் அறக்கோட்பாடுகள் சமுதாயத்தின் ஒருமித்த குரலாக எல்லா விதமான நற்செயல்களுக்கும் அடித்தளமாக அமையும். அதேபோல் காலத்திற்கு ஏற்ப மாறுபட்ட அறங்கள் இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. இதனை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியங்கள் அறத்தை வெளிப்படுத்துவதாக திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை மற்றும் சங்க இலக்கியங்கள் போன்ற நூல்களில் அறம் சார்ந்த செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு அறம் சார்ந்த செய்திகளை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

**Keywords :** அறம், இலக்கியம், குறள், சமுதாயம், கோட்பாடு, Aram, Literature, Kural, Society, Philosophy

**முன்னுரை**

மனித இனத்தின் கடந்த கால வாழ்க்கையை பாடுவன இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியங்கள் மானுட இனத்தின் பண்பாடு நாகரிகம் ஆகியவற்றை உள்ளடக்கியவைகள் ஆகும் மனித நாகரீகம் நதிக்கரையோரங்களில் உருவாகி இயற்கை வளங்களை தனது கைத்திறத்தால் அழகுபடுத்தியும் அறிவினால் உருமாற்றி வந்தது. தனக்கு கிடைத்த ஓய்வில் தன்னைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தது. அவ்வாறு சிந்தித்ததன் விளைவாக நல்லது கெட்டதை பகுத்தறிய தொடங்கினான் அதற்கு சில குறிப்பிட்ட வரையறைகள் தேவைப்பட்டன. அவை சில காலம் பின்பற்றப்பட்ட பின் அவை பழக்கமாகி பழக்கம் வழக்கமாகி வழக்கம் மரபாக மாறியது. அவ்வாறு முதலில் பின்பற்றப்பட்ட வந்த மரபாக மாறிய வரையறைகள் தான் அறம் என்ற பெயரில் நிலை பெற்றது.

**அறம் விளக்கம்**

மனிதன் எதைச் செய்தால் நன்மையாகும் எதை செய்வது தீமை பயக்கும் என்பதை உணர்ந்து உண்மைகளை பிறருக்கு பயன்பெறும் வகையில் நெறிகளாக வகுத்தான். அந்த நீதி நெறிகள் அறம் எனப்பட்டது. மனிதகுலம் தோன்றிய காலம் தொட்டு இன்றைய காலம் வரை மனிதன் நெறியுடன் வாழக்காரணம் அறம் ஆகும்.நாற் பொருள்களுள் முதலாவதாக சுட்டப்படும் அறம் தான் எல்லாவற்றிற்கும் தொடக்கமாகும். மேலும் அறம் என்பதற்கு நல்ல செயல்களின் தொகுதி என்று பொருள் கொள்ளலாம். இலக்கியமாயினும் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கை ஆயினும் அனைத்து அறம் சார்ந்தே இயங்க வேண்டும் என்பதே விழுமிய குறிக்கோள். மனித அளவில் குற்றமில்லாமல் இருப்பதை அறம் என்பார். திருவள்ளுவர்,

> ***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்***
> ***ஆகுல நீர பிற.*** குறள் 34

என்பதை எடுத்துரைக்கிறார்.

அறம் என்னும் சொல் ஆங்கிலத்தில் Ethics என அழைக்கப்படுகிறது. இது Ethos என்ற வேறு சொல்லில் இருந்து பிறந்தது. இது வழக்கம் என்ற பொருளில் அமைந்த கிரேக்க சொல்லிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்த சொல்லாகும். Ethics என்றால் உயர்நிலை வரம்பினை அமைக்கும் விதிகள் அல்லது நெறிகள் எனப் பொருள்படும். அறம், பொருள், இன்பம் ,வீடு ஆகிய நார்பொருளையும் இலக்கியங்கள் பேச வேண்டும் என்பர். இலக்கியங்கள் வழி அற

கருத்துக்களை பண்டைய தமிழர் பறை சாற்றியுள்ளனர். இலக்கியங்கள் எல்லாம் செயல்களின் மூலமாகவே அறத்தைச் சொல்ல வருகின்றன. தமிழ் இலக்கியங்களில் அறம் தலைமை கூறாக அமைகிறது. பொருளும் இன்பமும் அறத்தின் வழி இயங்கும் தன்மையினை என்பதை,

**சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல** புறநானூறு 31

என்ற தொடர் அறத்தை வலியுறுத்துகிறது. பலவகையான அறங்கள் இருப்பினும் ஒழுக்கமே சிறந்த அறம் என்பதைத் திருக்குறள்,

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை.** குறள் 132

என்கிறது. அறத்தைப் பற்றி அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரம் மூலம் விளக்கும் திருக்குறள்,

**''அறத்தான் வருவதே இன்பம்''** குறள் 39

**''இன்சொ லினதே அறம் ''** குறள் 93

**''அறத்திற்கே அன்பு சார்பு என்ப''** குறள் 76

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் மனித குலத்திற்கு தேவையான அறக்கோட்பாடுகளை உரைக்கின்றன. அக்காலக் கட்டத்தில் நாட்டின் அரசியல் நிலை வாழ்க்கை நிலையாகி வெற்றி கொண்டு பார்க்கும்போது மனித சமூகத்திற்கு தேவையான அறக்கருத்துக்களை கீழ்க்கணக்கு நூல்கள் அக்கறையுடன் எடுத்துள்ளதை அறிய முடிகிறது. கூற்றுவன் வருகின்ற நேரம் நிச்சயமற்ற தன்மை வாய்ந்தது. என்பதை நாலடியார்,

**இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது**

**பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி**

**ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்**

**மருவுமின் மாண்டார் அறம்.** நாலடியார் 36

என்று அடிகளில் காட்டுகிறது. அறம் செய்வதால் மனிதர்களுக்கு மட்டுமின்றி ஊருக்கே புகழ் உண்டாகும். அறம் இம்மைக்கும் மறுமைக்கும் உதவும். அறத்தால் இவ்வுலகில் பெருமை கிடைப்பதாலும் மறுபிறவிக்கு புண்ணியம் கிடைக்கும் காரணத்தாலும் அது ஒன்று மட்டுமே இறுதிவரை உயிராக உடன் வருவதாலும் அறம் செய்ய வேண்டும் என்பதை,

**தன்னொடு செல்வது வேண்டின் அறம் செய்க.** நான்மணிக்கடிகை 15

நான்மணிக்கடிகை பெரும்பாலான பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறத்திற்குரிய இலக்கணத்தை தெளிவுப்படுத்துகிறது. பசித்தவருக்கு சோறிட வேண்டும், குடிக்க நீர் தர வேண்டும் அதுவே உண்மையான அறம் என்கிறது நல்வழி.

வள்ளலார் காலத்தில் ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்வதே அறமாக கருதப்பட்டது. எனவே இலக்கியங்களின் தன்மையானது காலம் தோறும் தேவை ,சூழல் போன்றவற்றால் மாறுபட்டாலும் அதில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துகளின் தன்மை மாறுபட்டாலும் அறம் கூறுவது எந்த இலக்கியம் தவிர்க்கவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

அறக்கோட்பாடு எனும் பொழுது அது மனித வாழ்வின் பொருள் பொதிந்த உயர்நிலை குறிக்கோள் எனலாம். அறவியல் சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் நடத்தை பற்றி ஆராயும்

ஒரு வகை அறிவியலாகும். பரந்த மனப்பான்மை வளரவும் பொதுவாக அறநெறி பற்றிய முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுவதும் இதன் சிறப்பாகும். அறவியல் கோட்பாடு தனிமனிதனின் அறிவைப் பண்படுத்துகிறது. உயர் குறிக்கோள் வாழ்க்கை நோக்கிய செயல்களில் ஈடுபடுகிறது. பகுத்தறிவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்களை அவற்றின் பொருட்டு செய்ய தூண்டுவது அறக்கோட்பாடுகள் ஆகும். நன்னடத்தையை கை கொள்வதற்கும் நல்வாழ்வு வாழவும் மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று சிறந்த நோக்கத்துடன் திரட்டிய வழிகாட்டும் அறிவை நாம் அறநெறிக் கோட்பாடு எனலாம். எத்தனை விருப்பு, வெறுப்பு, தேவைகள் முரண்பட்ட எண்ணம், கருத்து ஆகியவற்றை தன்னகத்தை கொண்டு அவற்றிற்கு செம்மையான முழு வடிவம் தருவன அறக்கோட்பாடுகள் ஆகும்.

**தனிமனித அறங்கள்**

அறநிகழ்வுகள் காலந்தோறும் கடைபிடிக்கப்பட்டு வருவன. சொல், செயல் அனைத்திலும் அறம் போற்றப்பட்டு வந்ததை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு.** குறள்132

தனி மனிதனைப் பொறுத்தவரையில் நல்ல ஒழுக்கமே முக்கியமானது. தனிமனித அறங்கள் சமுதாய அறங்கள் விரிவடையும் தன்மையினர் தனி மனிதர்களால் கடைபிடிக்கப்பட்டு ஒதுக்கப்படும்போது பல்வேறு அறங்கள் பொது அறங்களாக தோற்றம் பெற்று அது பண்பட்டு அறநிலையாக இடம் பெறுகின்றன. மனிதன் ஆறறிவு படைத்தவன். தன்னை ஒருவர் வழிநடத்த வேண்டும் என்று எண்ணாமல் இயல்பாகவே நல்ல முறையில் நடக்க வேண்டும். தீயவற்றவை விரும்பாத உள்ளமும் அதை விரும்பினாலும் நூல் பொருள் அடக்கத் தெரிந்த தன்மையும் உடையோர் அறக்கோட்பாடுகளில் இருந்து வழுவ மாட்டார்கள்.பொருள் மீது பற்றுக் கொண்டு தமக்கு தேவைப்படுவதைக் குறைவாகச் செய்வார்கள். நன்னெறியில் செலுத்தும் பேரறிவு உடையவர்கள் ஒழுக்கம் இதுவே ஆகும். தனி மனிதர்கள் பேணிய அறக்கோட்பாடும் இதுவே ஆகும். இதை

**விழையா உள்ளம் விழையும் ஆயினும்,**
**என்றும், கேட்டவை தோட்டி ஆகமீட்டு ஆங்கு,**
**அறனும் பொருளும் வழாமை நாடி,**
**தற்றகவு உடைமை நோக்கி, மற்றதன்**
**பின்ஆ கும்மே, முன்னியது முடித்தல்;**
**அனைய, பெரியோர் ஒழுக்கம்;** அகநானூறு 286

ஒருவன் தான் செய்யக்கூடாத காரியம் என்று உணர்ந்து அதை செய்யக்கூடாது அதுவே அறம் ஆகும். தீவினைகளை பிறர் அறியாமல் செய்தாலும் அதை நெஞ்சிடம் மறைக்க முடியாது. இதை கலித்தொகை,

**கண்டவர் இல்' என உலகத்துள் உணராதார்,**

**தங்காது தகைவு இன்றித் தாம் செய்யும் வினைகளுள்,**

**நெஞ்சு அறிந்த கொடியவை மறைப்பினும், 'அறிபவர்**

**நெஞ்சத்துக் குறுகிய கரி இல்லை ஆகலின்',** கலித்தொகை 125

எடுத்துக்கூறுகிறது.

**அறத்தின் தன்மை**

அறமானது அதை செய்பவருக்கும் பெறுகின்றவருக்கும் மகிழ்ச்சி அளிப்பது. மனிதனின் தனித்துவம் மிக்க குணங்களில் ஒன்று அறம் செய்தல். அறமானது இன்பத்தையும் பொருளையும் வணங்கக்கூடியது அதுவே அறத்தின் தன்மையாகும். இதனை

**சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல** புறநானூறு **31**

என்ற அடிகளால் உணர்த்துகிறது.

இவ்வுலகில் இயல்புணர்ந்து அறம் செய்ய வேண்டும். அதாவது அறத்தை செய்யாவிட்டாலும் பரவாயில்லை ஆனால் அறமற்றதை செய்யக்கூடாது அதுவே உலகோர் விரும்பும் நெறி ஆகும். மனித சமூக அறக்கோட்பாடுகள் மக்கள் பலர் கூடி வாழும் சமுதாய வாழ்க்கைக்கு அறம் கட்டாயம் வேண்டும். ஒருவருக்கொருவர் கூடி வாழும் அமைப்பான சமூகத்தில் மனிதர்கள் பல்வேறு ஒழுக்க நெறிகளை பின்பற்றினர். எந்த உறவும் மற்ற பல்வேறு சாதி, மத இன மக்கள் கூடி சமுதாயத்திற்கும் நலப்பயக்கும் வகையில் செய்கின்ற அல்லது பின்பற்றும் நல்ல செயல்கள் சமுதாய அறங்களாக அமையும். செய்நன்றி அறிதல், பிறர் செய்த நன்மையை மறவாது வாழும் பண்பை நன்றியறிதல் என்பர். ஒருவர் செய்த உதவியை மறவாது வாழ்தலே அறம் ஆகும். இதனை

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.** குறள்**110**

ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறம் ஆகாது. பயன் கருதாது செய்யும் உதவியை சிறப்பானது. தமக்கு ஒருவர் செய்த உதவியை மறக்காமல் எவ்வகையானும் கைமாறு செய்திட வாய்ப்பு கிடைத்தால் அதை நம் முன்னோர்கள் பெருமையாக கருதி செய்தனர்.

**விருந்தோம்பல்**

பழந்தமிழர் போற்றிய தலையாய பண்பு விருந்தோம்பல். விருந்தினர்கள் எவரேனும் வெளியில் உள்ளாரோ என்று கேட்டு கதவடைக்கும் பழக்கம் இருந்துள்ளது என்பதை

**புள்ளும் மாவும் புலம்பொடு வதிய**

**நள்ளென வந்த நார் இல் மாலை,**

**பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்,**

**'வருவீர் உளீரோ?'** குறுந்தொகை **118**

என்ற அடிகளால் அறிய முடிகிறது.

**ஈதல் அறம்**

மனித குலத்தின் சிறப்புகளில் ஒன்று. பிறர் படும் இன்னல்களைக் கண்டு இரங்குதலும் அத்துன்பத்தைப் போக்க முயல்வதும் ஆகும். அந்த வகையில் எழுந்த செயலை ஈகையாக மலர்ந்தது. வறுமையால் ஒன்றனை இழந்தவர்க்கு பொருளுடையார் அதனைக் கொடுத்தால் அவரது கடமையாகும். தனக்காக பொருள் சேர்க்காமல் பண்டைய சான்றோர் ஈதலுக்கு பொருள் சேர்த்தனர். பொருள் இல்லாவிட்டில் பிறருக்கு ஈத்துவக்கும் இன்பம் கிடைக்காது என்று இதற்காகப் பொருள் சேர்ப்பதை அறமாகக் கருதினர்.

**ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' எனச்**

**செய் வினை கைம்மிக எண்ணுதி** குறுந்தொகை 63

**பிறர் நலம் பேணுதல்**

பிறருக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டு நல்லோர்கள் துன்பப்படுபவர்கள் தமக்கு உறவில்லாத போதும் அதற்காக வருந்தி அதனைப் போக்க முயலுவர். நமக்கு நேரிடும் துன்பம் கண்டு வருந்தாமல் அதனை தாங்கிக் கொள்ளும் இயல்புடையோர் சான்றோர்கள் என்பதை கலித்தொகை எடுத்துரைக்கிறது.

**பிறர் நோயும் தம் நோய் போல் போற்றி அறனறிதல்**

**சான்றவருக்கு எல்லாம் கடன்** கலித்தொகை140

**குடும்ப அறம்**

அக வாழ்க்கையில் தலைவன் தலைவி ஆகிய இருவரும் அன்பு கொண்டவர்களாகவும் அறப்பண்பு மிக்கவர்களாகவும் விளங்கினர்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது.** குறள் 45

என்ற பொருள் அன்பு பண்பாகவும் அறன் பயனாகவும் அமைவதே இல்வாழ்க்கை என்கிறது.

**முடிவுரை**

பண்டைய தமிழர் தனி மனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறிகளை அறக்கோட்பாடு உருவாக்கும். வாழ்க்கையில் தனி மனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறக்கோட்பாடு அமைகிறது. சமுதாயம் முன்னேற அறக்கோட்பாடுகள் இன்றியமையாதது. அதாவது மனித இனம் பலதரப்பட்ட விளைவுகளையும் முரண்பட்ட தேவைகளையும் உடையது.ஆதலால் அறத்தினால் வருவதுதான் உண்மையான இன்பம் என்பதை அக்கால மக்களின் வாழ்வியல் முறைகள் எடுத்துக் கூறுகிறது. நம் முன்னோர்கள் உலகிற்கு முன்னாதாரமாக அற வழியில் நடந்து காட்டினார்கள். சங்க இலக்கியங்களில் இத்தகைய அறக்கோட்பாடுகள் ஆங்காங்கு காணப்பட்டாலும் அதைனையடுத்து தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் அறம் உரைக்கும் 11 நூல்கள் அனைத்தும் அறக்கோட்பாடுகளை வலியுறுத்துவன. முக்கால மக்களுக்கும் இவ்வற நூல்கள் நன்மை பயப்பதாகவே உள்ளன. மக்களும் கால ஓட்டத்தில் மாறுபட்டு இருந்தாலும் இந்நூல்கள் தரும் அறக்கோட்பாடு பண்புகள் என்றும் எக்காலத்தும் நிலைத்து நிற்பன. ஆனால் அன்றைய காலத்து மக்களின் வாழ்வியல் இன்றைய காலத்து மக்களின் வாழ்வியலோடு ஒப்பிட்டு பார்த்தால் அறம் என்ற செயலிலிருந்து வெகுவாக மாறிவிட்டது. பொய்மையை போற்றி வாழும் போலியான வாழ்க்கையை இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**துணைநின்ற நூல்கள்**

1. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும், புலியூர் கேசிகன், 2020, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை.
2. தமிழ்க் காதல் - வ.சுப. மாணிக்கம், 1962, பாரி நிலையம், சென்னை 108

3. திருக்குறள், புலவர் வீ. சிவானந்தம், 2012, விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.
4. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், எம் நாராயண வேலுப்பிள்ளை, நர்மதா பதிப்பகம், சென்னை


## References


1. Etuthogayum Pathupatum, Puliyur kesikan,Sri senbaga pathipagam, Chennai. 2020
2. Tamil kaadhal,Manikam VS,1962, Pari Nilayam,Chennai 600108.
3. Thirukural,Sivagnanam V, Pulavar, 2012, Vijaya Pathipagam, Coimbatore.
4. Pathinen keelkanakau noolgal,m.naarayana velupillai,narmatha pathipagam
5. Dr. N. Subpurettiyar - Science in Tamil Then and Now, Ulagathamil Research Institute - Chennai – 600113.
6. Devi - The Science of Perceiving Sangam Literature, Shanlax Journals, ISSN-2454-3993 July - 2017


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**பிரஷிலா.சு " தமிழ் இலக்கியங்களில் அறக்கோட்பாடு"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 3, சூலை 2024, பக். 32-38


**Cite this Article in English**


**Prashila.S "Tamil Ilakiyangalil Arakkotpadu"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 3, July 2024, pp. 32-38